Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.54/2023 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW9 |
| | | Defence |
| | | Court |
| Name | : | பாண்டியராஜ் |
| Husband Name | : | பெத்து |
| Village | : | மினாக்குளம் |
| Taluk | : | திருச்சுழி |
| Caste | : | |
| Calling | : | சென்ட்ரிங் வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 31 |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 22.08.2025

முதல் விசாரணை :-

1. நான் மேற்சொன்ன விலாசத்தில் வசித்து வருகிறேன். கம்பி கட்டும் வேலை செய்கிறேன். என்னை என் கிராமத்தில் பாண்டி என்று அழைப்பார்கள். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது வீட்டிற்கு பின்பக்கத்தில் வசிக்கிறார். கடந்த 23.10.2022 அன்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு என்னுடைய முதலாளி எங்களுக்கு விருந்து வைத்தார். விருந்து முடிந்து சுமார் இரவு 8.00 – 8.30 மணியளவில் நான் வீட்டிற்கு வந்து படுத்துவிட்டேன். யாரோ சிலர் என் வீட்டு கதவை அச்சமயம் தட்டினார்கள். யார் என்று கதவை திறந்து பார்த்தபோது அ.சா.7 ஞானசேகர் (எ) சேகர் மற்றும் அவருடைய மைத்துனரான அ.சா.5 ஜோதிமுருகன் ஆகியோர் கதவை தட்டியிருந்தார்கள். என்னவென்று விசாரித்தபோது அ.சா.7 ன் மைத்துனரும் ஆஜர் எதிரியின் கணவருமான முத்துக்குமார் என்பவர் தன்னை தானே சுவற்றில் முட்டிக்கொண்டு காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என கூறினார்கள்.

2. என் அண்ணன் கருப்பு ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறார். அதனால் என் அண்ணனை அவர்கள் எங்கே என்று கேட்டார்கள். அவர் அச்சமயம் வீட்டில் இல்லை. மேலும் அவர்கள் காயம் அடைந்த முத்துக்குமாரை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள். அதன் பேரில் நான் எதிரி வீட்டிற்கு சென்று பார்த்தபோது முத்துக்குமார் வாயில் இரத்தம் வடிந்த நிலையில் மல்லாக்க கிடந்தார். முத்துக்குமாரின் சித்தப்பாவின் மகனான அ.சா.6 பிரபு, த/பெ.நாகராஜ் என்பவரை வீட்டிலிருந்து அழைத்து வந்தேன். மேலும் எங்கள் ஊரை சேர்ந்த கதிரேசன் மகன் முத்துக்குமார் ஆட்டோ ஓட்டி வருகிறார். அவருக்கு போன் செய்து ஆட்டோ எடுத்து வருமாறு கூறினேன். சிறிது நேரத்தில் ஆட்டோ வந்துவிட்டது. அந்த ஆட்டோவில்

நான், அ.சா.5 முதல் அ.சா.7 ஆகியோர் காயம் அடைந்த முத்துக்குமாரை ஆட்டோவில் ஏற்றினோம்.

3. ஆட்டோவில் நான், ஆஜர் எதிரி, அவருடைய மகள் சர்மிளா மற்றும் அ.சா.6 பிரபு ஆகியோர் வீரசோழன் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பணியிலிருந்த செவிலியர் காயமடைந்த முத்துக்குமாரை பரிசோதித்து பார்த்தபோது அவருக்கு நாடித்துடிப்பு கம்மியாக உள்ளதாக கூறினார். உடனே அங்கிருந்து அருகிலிருந்த தவமுருகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு பணியிலிருந்த செவிலியர் காயமடைந்த முத்துக்குமாரை பரிசோதித்து பார்த்தபோது அவருக்கு நாடித்துடிப்பு கம்மியாக உள்ளதாக கூறினார். உடனே அருகிலிருந்த ஜெகநாதன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அச்சமயம் அங்கு மருத்துவர் இல்லாததால் பணியிலிருந்த செவிலியர் மருத்துவரை போனில் தொடர்பு கொண்டு வருமாறு கூறினார். சிறிது நேரத்தில் மருத்துவர் ஜெகநாதன் மருத்துவமனைக்கு வந்துவிட்டார். காயம்அடைந்த முத்துக்குமாரை பரிசோதித்தார். மருத்துவர் ஜெகநாதன் அவர்கள் முத்துக்குமார் இறந்துவிட்டதாக கூறினார்.

4. அதே ஆட்டோவில் முத்துக்குமாரின் சடலத்தை நாங்கள் ஊருக்கு எடுத்து வந்தோம். வீட்டில் இருந்தபோது முத்துக்குமாரின் தாயாரான அ.சா.1 நாகலட்சுமி, அவருடைய சகோதரர் அ.சா.2 ஆனந்தகுமார் மற்றும் அவருடைய சித்தி மற்றும் தகப்பனார் ஆகியோர் பிரேதத்தை பார்த்து அழுதார்கள். இறப்பில் சந்தேகம் உள்ளதாக கூறி வீரசோழன் காவல்நிலையத்தில் அ.சா.1 புகார் அளித்தார்.

5. 24.10.2022ம் தேதியன்று அதிகாலை 4.00 மணியளவில் நரிக்குடி காவல்ஆய்வாளர் முத்துக்குமாரின் வீட்டிற்கு வந்து விசாரணை

நடத்தினார்கள். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அவர்கள் தயாரித்த பார்வை மகஜரில் நானும், மணிகண்டன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படுவது தான் போலீசார் எங்கள் முன்னிலையில் தயாரித்த பார்வை மகஜர் ஆகும். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண் மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவற்றை விசாரணைக்காக போலீசார் கைப்பற்றினார்கள். அதற்கு அத்தாட்சி தயாரித்தார்கள். அந்த அத்தாட்சி நடவடிக்கையில் நானும் மணிகண்டனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த அத்தாட்சி ஆகும். **அத்தாட்சி அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

6. பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான், சாட்சி வரைபடம் வரைந்ததற்கும், சம்பவ இடத்தை பார்வையிட்டதற்கும் சாட்சியாக இருந்ததாக கூறுகிறார். அத்தாட்சியில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வீரசோழன் காவல்நிலையத்தில் தான் அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ல் நானும் மணிகண்டனும் கையொப்பம் செய்தோம் என்று சொல்வது தவறு. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது நாங்கள் சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோம் என சாட்சி கூறுகிறார்.

7. அ.சா.1 நாகலட்சுமி கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இறப்பில் சந்தேகம் இருப்பதாக

புகார் அளித்திருப்பதாக ஊரில் பேசிக்கொண்டார்கள், அந்த விவரங்கள் எனக்கு தெரியும் என சாட்சி கூறுகிறார். நானும் மணிகண்டனும் 24.10.2022 ம் தேதி அதிகாலை 4.00 மணியளவில் எதிரி கலா வீட்டருகே நின்றுகொண்டிருந்தோம். ஏட்டையா வந்தாரா என்றால் ஆய்வாளரும் அவருடன் இரண்டு காவலர்களும் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள் என சாட்சி கூறுகிறார். அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 யை போலீசார் முத்துக்குமாரின் வீட்டின் முன்புள்ள திண்ணையில் வைத்து எழுதினார்கள். சுமார் ஒரு மணிநேரம் எழுதினார்களா என்றால் அரை மணிநேரம் ஆனது என சாட்சி கூறுகிறார். போலீசார் சம்பவ இடத்திலிருந்து சுமார் 5.30 – 6.00 மணிக்குள் கிளம்பிவிட்டார்கள். முத்துக்குமாரின் பிரேதம் பிரேத பரிசோதனைக்கு பிறகு எத்தனை மணிக்கு ஊருக்கு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

8. போலீசார் முத்துக்குமாரின் வீட்டிற்கு 24.10.2022 முதல் 26.10.2022 வரை பந்தோபஸ்து பணியிலிருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் செம்மறி ஆடு மேய்ப்பதால் காலையில் மேய்ச்சலுக்கு சென்றுவிட்டு மாலையில் வீடு திரும்பி உறங்கிவிடுவேன். ஆகையால் ஊரில் போலீஸ் பந்தோபஸ்து பற்றி என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சென்ட்ரிங் வேலை செய்வதாக கூறிவிட்டு, குறுக்கு விசாரணையில் ஆடு மேய்ப்பதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, இரண்டு வேலையையும் நான் செய்கிறேன் என சாட்சி கூறுகிறார். எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றும் ஆவணங்களில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க அவர்களுக்கு

ஆதரவாக வழக்கிற்கு ஏற்றார்போல் தவறுலாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.54/2023 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW10 |
| | | Defence |
| | | Court |
| Name | : | காளிமுத்து |
| Husband Name | : | காளியப்பன் |
| Village | : | சுக்கிலநத்தம் |
| Taluk | : | அருப்புக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | கிராம நிர்வாக அலுவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 57 |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 22.08.2025

முதல் விசாரணை :-

1) நான் தற்போது சுக்கிலநத்தம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் மினாக்குளம் கிராமத்தில் ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2025 வரை கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். கடந்த 26.10.2022 அன்று காலை 11.00 மணியளவில் நானும் எனது கிராம உதவியாளர் லட்சுமியும் என்னுடைய அலுவலகத்தில் அலுவல் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மினாக்குளம் கிராமத்தினை சேர்ந்த முத்துக்குமார் மனைவி கலா என்பவர் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து கடந்த 23.10.2022 அன்று இரவு 8.30 மணியளவில் தன்னுடைய கணவர் முத்துக்குமாரை களைக்கொத்தியால் கொத்தியும், உடலில் பல பாகங்களில் வெட்டியும் கொலை செய்துவிட்டேன் என என்னிடம் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு வாக்குமூலம் கொடுத்தார். நான் அந்த விவரங்களை என்னுடைய உயர் அதிகாரிக்கு தெரிவித்தேன். என்னுடைய உயர் அதிகாரிகள் அருகில் இருக்கும் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கூறினார்கள். அதன் பேரில் மேற்சொன்ன கலாவை அழைத்துக்கொண்டு நானும் எனது உதவியாளர் லட்சுமியும் நரிக்குடி காவல்நிலையத்திற்கு நண்பகல் 1.00 மணியளவில் சென்றோம்.

2. அங்கிருந்த ஆய்வாளரிடம் கலா அவர்கள் என்னிடம் கூறிய சங்கதிகளை மீண்டும் ஆய்வாளரிடம் கூறினார். கலா அவர்கள் கொலை செய்துள்ளதால் அவரை போலீசார் 1.30 மணியளவில் கைது செய்தார்கள். என்னிடம் எதிரி கலா கொடுத்த தகவலை நான் ஆய்வாளருக்கு சிறப்பு அறிக்கையின் மூலம் எழுத்து பூர்வமாக தெரிவித்தேன். அந்த சிறப்பு அறிக்கையில் என்னுடைய உதவியாளர் லட்சுமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார். **நான் கொடுத்த அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி கலா அவர்கள் தான்செய்த குற்றத்தை

ஒப்புக்கொண்டு எங்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன் கணவரை கொலை செய்ய பயன்படுத்திய களைக்கொத்தியை வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் அந்த ஆயுதத்தை அடையாளம் காட்டுவதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆய்வாளர் அவருடைய பார்ட்டி சகிதம் என்னையும் கிராம உதவியாளரையும் எதிரியையும் அழைத்துக்கொண்டு மினாக்குளம் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்றோம். அப்போது எதிரி தன்னுடைய வீட்டிற்கு பின்புறத்தில் சீமைக்கருவேல முள்புதர்களில் மறைத்து வைத்திருந்த களைக்கொத்தி, எதிரி அணிந்திருந்த இளம்பச்சை நிற பூ போட்ட சேலை ஆகிய பொருட்களை ஆய்வாளரிடம் எடுத்து ஆஜர் செய்தார். நீதிமன்றத்தில் காட்டப்படும் களைக்கொத்தி மற்றும் சேலையை தான் எதிரி ஆஜர் படுத்தினார். **களைக்கொத்தி சா.பொ.1, இளம்பச்சை நிற பூ போட்ட சேலை சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் மேற்சொன்ன வழக்கு சொத்துகளை அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் என்னுடைய உதவியாளர் லட்சுமியும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி கலா அத்தாட்சியில் கையொப்பம் செய்தார். ஆய்வாளரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தார். **எதிரி போலீசாரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 யை ஆய்வாளர் கைப்பற்றியதற்காக தயாரித்த அத்தாட்சி அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

4. 19.04.2022 அன்று தான் மினாக்குளம் கிராம நிர்வாக அலுவலராக பதவி ஏற்றுக்கொண்டேன். எங்கள் அலுவலகத்திற்கு எதிரி கலா 26.10.2022 அன்று வருவதற்கு முன்பாக எதிரியை நான் நேரடியாக பார்த்ததோ, பேசியதோ கிடையாது என்றும், அவர் எனக்கு பரிட்சயம் இல்லாத நபர் என்றால் சரிதான். 26.10.2022 வரை மினாக்குளம் கிராமத்தில் முத்துக்குமாரின் இறப்பை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். 23.10.2022 மற்றும் 24.10.2022 ஆகிய தினங்களில் போலீசார் மினாக்குளம் கிராமத்திற்கு முத்துக்குமாரின் இறப்பு தொடர்பான விசாரணைக்கு வந்து சென்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது உதவியாளர் லட்சுமி முத்துக்குமாரின் இறப்பு பற்றி எதுவும் எனக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

5. என்னுடைய உயர்அதிகாரிகள் எழுத்துபூர்வ உத்தரவு எதுவும் எனக்கு கொடுக்கவில்லை. எதிரி கலா எங்கள் அலுவலகத்திற்கு வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அவரை காவல்நிலையத்திற்கு அழைத்து வரட்டுமா என்று நான் காவல்ஆய்வாளரிடம் கேட்கவில்லை. என்னுடைய உயர்அதிகாரி கொடுத்த வாய்மொழி உத்தரவின் பேரில் எதிரி கலாவை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்ல தயராக இருந்தபோது என்னுடைய உதவியாளர் லட்சுமி காவல் ஆய்வாளருக்கு நாங்கள் காவல்நிலையத்திற்கு வருகிறோம் என தகவல் தெரிவித்தார். அ.த.சா.ஆ.5 யை நான் எழுதவில்லை. காவல்நிலையத்தில் வைத்து அந்த ஆவணம் காவலரால் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 2ம் பக்கத்தில் கடைசியிலிருந்து இரண்டாவது வரியில் தேதி 24.10.2022 என்பதை 26.10.2022 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். எதிரி என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் ஷரத்துகளை காவல்நிலையத்தில் வைத்து ஒரு காவலர் எழுதினார் என்றால் சரிதான்.

6. நாங்கள் காவல்நிலையம் செல்வதற்கு முன்பாகவே போலீசார் அ.த.சா.ஆ.6 ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்து வைத்திருந்தார்கள் என்று சொல்வது தவறு. நான் வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றும் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் நானும், உதவியாளரும், எதிரி கலாவும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. இரவு 9.30 மணி வரை நான் காவல்நிலையத்தில் இருந்துவிட்டு அதன் பிறகு என்னுடைய அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். இரவு 9.30 மணி வரை என்னுடைய உதவியாளர் லட்சுமியும் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். ஆவணங்களை தயார் செய்து கையெழுத்து செய்வதற்கு அவ்வளவு நேரம் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

7. அ.த.சா.ஆ.7 ல் நான் மினாக்குளம் கிராமத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், சான்றுபொருட்களை ஏற்கனவே போலிசார் 23.10.2022 அன்றே கைப்பற்றிவிட்டார்கள் என்றும், அரசு அலுவலர் என்பதால் போலீசாருக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கலா என் முன்னிலையில் ஆஜராகவில்லை என்றும், எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நான் கலாவை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றும், போலீசாரிடம் கலா எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றும், சான்று பொருட்களை போலீசார் சொன்ன நாளில் நேரத்தில் கைப்பற்றவில்லை

என்றும், எதிரி கலாவை போலீசார் 23.10.2022 தேதியிலிருந்து விசாரணைக்காக காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.